# மறவாதே

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங் 103:2)**




மேற்கண்ட வசனத்தில் சங்கீதக்காரன், என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என்று கூறினபின், அவர் செய்த சகல உபகாரங்களுக்காகவும் அவரை துதி என்று கூறாமல், மறவாதே என்று கூறுகிறான். ஏனெனில் ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக அந்நேரத்தில் அவரை துதிப்பது மிக எளிது. ஆனால் அதை என்றும் மறவாமல் இருப்பதுதான் கடினமாகும். ஆண்டவரும் நம்மிடையே இதைத்தான் எதிர்பார்க்கிறார். வேதத்தில் பல இடங்களில் ஆண்டவர் செய்த நன்மைக்காய் அவரை துதித்து பாடின மக்கள் சீக்கிரத்தில் அதை மறந்து, அவருக்கு விரோதமாய் முறுமுறுத்து பாவம் செய்தனர்.

ஆதியாகமத்தில் ஆண்டவர் நம் முற்பிதாக்களான ஆதாம், ஏவாளை உருவாக்கி, பூமியனைத்தையும் ஆளக்கடவர்கள் என்று கூறினபொழுது எல்லாம் நன்றாகவே இருந்தது (ஆதி 1:26). ஆனால் தேவன் தங்களுக்கு கொடுத்த ஆளுகையை மறந்து, பிசாசின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்த பொழுது, பாவத்திற்குள்ளானார்கள். யாத்திராகமத்தில் இஸ்ரவேல் மக்களும் இவ்வாறே செய்தனர். எகிப்தில் எவ்வளவோ அற்புதங்களை ஆண்டவர் செய்தும், சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிளந்தும், அவற்றை எல்லாம் மறந்து, சிறு சிறு காரியங்களுக்காக ஆண்டவரிடம் முறுமுறுத்தனர்.

புதிய ஏற்பாட்டின் காலத்திலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவோ அற்புதங்களை செய்து தம்மை வெளிப்படுத்தினார். ஐந்து அப்பம், இரண்டு மீன்களை கொண்டு ஆயிரகணக்கானோரை ஆண்டவர் போஷித்திருந்தும் (மத் 14:15-21), பின்னொரு சமயத்தில் இதே போன்றதொரு சூழ்நிலையில் **"அதற்கு அவருடைய சீஷர்கள்: இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்"** (மத் 15:33), இதற்கு காரணம், ஆண்டவர் முன்பு செய்த நன்மையை / அற்புதத்தை அவர்கள் மறந்து போனார்கள். இங்கு மறதி என்பது ஏதோ மூலையில் ஏற்படும் ஞாபக மறதி அல்ல, இம்மட்டுமாய் நம்மை போஷித்து, அற்புதஞ் செய்து வழிநடத்தி வந்த தேவன், இனிமேலும் நடத்துவார் என்ற உணர்வு இல்லாததே காரணமாகும். நம் வாழ்விலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

கற்பாறையான இடத்தில் விதைக்கப்பட்ட விதையை போல உபத்திரவமும், துன்பமும் வாழ்வில் உண்டானவுடனே, ஆண்டவர் செய்த நன்மைகள் யாவும் மறந்துபோகின்றன (மத் 13:20,21). இன்றும் சில நேரங்களில், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதையை போல உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் உண்டானவுடனே (மத் 13:22), ஆண்டவரோடு உள்ள ஐக்கியம், அவருடைய வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள் யாவும் மறந்து போகிறது. இதனால் உபத்திரவ நேரங்களில் நிலை நிற்க முடியாதபடி சோர்ந்து போகிறோம், பாவ சோதனையில் வெற்றி பெற முடியாமல் வீழ்ந்து போகிறோம்.

2 பேதுரு 1:9 கூறுகிறது **"அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்"**, ஆம் தேவன் நம்மை மன்னித்து மீட்டெடுத்த சூழ்நிலையை, தமது கிருபையை நமக்கு பாராட்டி, அந்தகாரத்தில் இருந்து நம்மை ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நடத்தி வந்த (1 பேதுரு 2:9) பாதைகளை நாம் மறக்க கூடாது. அப்பொழுது மட்டுமே பாவ சோதனைகளை மேற்கொண்டு, உபத்திரவ நேரங்களில் நிலைநின்று அவருடைய புண்ணியங்களை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியும். தேவன் அளித்த நன்மைகளை மறக்காதவர்களே அவருக்கு சாட்சிகளாய் நிற்க முடியும், அவருக்கு ஊழியம் செய்ய முடியும். தேவ ஆசிர்வாதங்களை, வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க முடியும். என் ஆத்துமாவே, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே, ஆமென், அல்லேலூயா.